# தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் இடமாற்றம்

# நிர்வாகத் தரப்பு இணக்கம்

கோலாலம்பூர், மார்ச் 26- ஜாலான் மஸ்ஜிட் இந்தியா, கோலாலம்பூரில் பெரும் சர்ச்சையான இந்து ஆலயத்தை அருகிலுள்ள வேறு இடத்திற்கு மாற்ற ஆலய நிர்வாகம் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்துடன் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை, கலந்தாலோசனை ஆகியவற்றுக்குப் பிறகு இந்த இணக்கம் காணப்பட்டது என தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் நிர்வாகச் செயலாளர் கார்த்திக் குணசீலன் கூறியதாக மலேசியா கினி செய்தி வெளியிட்டது.

இந்த இணக்கத்தை அடைவதற்கு உதவிய அமைச்சர், மக்கள் பிரதிநிதிகள், மற்ற அதிகாரப்பூர்வ தரப்பினருக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம் என்று அவர் மேலும் சொன்னார். மாற்று இடம் பக்கத்தில்தான் இருக்கிறது. அதுவும் ஜாலான் மஸ்ஜிட் பகுதிக்குள்ளேயே இந்த மாற்று இடம் அமைந்திருக்கிறது. அது மட்டுமன்றி ஆலயத்திற்கான ஒரு மாற்று இடமாக இது



பொருத்தமானதாகவும் உள்ளது என்று அவர் கூறியதாக மலேசியா கினி செய்தி தெரிவித்தது.

ஆலயம் தற்போதுள்ள நிலப் பகுதியில் ஒரு பள்ளிவாசல் கட்டப்படுவதற்கு வழிவிடும் வகையில் சம்பந்தப்பட்ட ஆலயம் இடமாற்றம் செய்யப்படுகிறது.

இதற்கிடையே சம்பந்தப்பட்ட அந்த நிலம் வாங்கியது, விற்பனை செய்யப்பட்டது தொடர்பான உடன்பாட்டின் விவரங்களை அரசாங்கம் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் வழக்கறிஞரும் மலேசிய வழக்கறிஞர் மன்ற முன்னாள் தலைவருமான டத்தோ அம்பிகா ஸ்ரீனிவாசன், வழக்கறிஞர் என். சுரேந்திரன் ஆகியோர் வலியுறுத்தி இருந்தனர்.